சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.365/2018**

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் செவ்வாய்க்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா அம்மாள் | தொழில் | இல்லத்தரசி |
| கணவர் பெயர் | முருகன் | ஜாதி | |
| கிராமம் | வடமாதிமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | போளூர் | வயது | 83 |

**30.06.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 19.04.1940 தேதியிட்ட உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.03.1941 தேதியில் வாதியின் தாத்தா இறந்ததற்கான இறப்பு சான்று **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அம்பலவான முதலியார் மனைவி இறந்ததற்கான இறப்பு சான்று **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சின்னத்தாயம்மாள் வாரிசு சான்று **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் தாயார் இறப்பு சான்று **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் தந்தை இறப்பு சான்று **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் தாயாரின் வாரிசு சான்று **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.09.1957 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.07.1964 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.11.1965 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் பிறப்பு சான்று **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கான கணினி பட்டா **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கான கணினி புல வரைபடம் நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.04.2018 தேதியிட்ட பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் பாகம் பிரித்து கொண்டதற்கான பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.10.2018 தேதியிட்ட பிரதிவாதி தனியார் நிதி நிறுவனத்திற்கு எழுதி கொடுத்த அடமான சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.